இந்த திருத்தத்தை அரசாங்கம் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது ? அதற்கு அரசாங்கம் காரணம் சொல்லவில்லை. இந்த திருத்தத்தை நான் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கடைசியாக ஐந்தாவது திருத்தம். 24 மணி நேரம் ஏன் கொடுக்கக் கூடாது என்பதற்கு அமைச்சர் காரணம் கொடுக்கவும் இல்லை, அதற்கு தகுந்த சமாதானமும் சொல்லவில்லை. 24 மணி நேரம் வேண்டும் என்ற திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்."

MR. SPEAKER :—" நீங்கள் 2, 4, 5 திருத்தங்களை மாத்திரம் வற்புறுத்துகிறீர்களா ? மூன்றுவது திருத்தத்தை நீங்கள் வற்புறுத்த வில்லையா ? "

SRI A. RATNAM :—" ஆம்."

The following amendment was, by leave, withdrawn :—

'In proposed rule 33 (3), *for* the words " and for each such warrant a fee of two annas shall be levied, " *substitute* the words " and for each such warrant form a fee of one anna shall be levied ".

THE HON. SRI K. RAJARAM :—" I am not accepting the other amendments."

MR. SPEAKER :—" The question is—

'In proposed rule 33 (1) *for* the words " fifteen days ", *substitute* the words " one month ", and *delete* the words " with such further sum as will satisfy the probable charges that will be incurred in connexion with the detention and sale of the property so distrained ".

'In proposed rule 33 (4), *for* the words " sunrise and sun-set ", *substitute* the words " 8 a.m. and 5 p.m.".

'In the proviso to proposed rule 33 (4), *for* the words " until he has given three hours' notice ", *substitute* the words " 24 hours' notice ".' "

The amendments were put and lost.

The motion was put and carried.

(4) REPORT OF THE PUBLIC ACCOUNTS COMMITTEE.

3-45 p.m. * THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I move—

'*That the Report of the Public Accounts Committee on the Accounts of the State of Madras for the year* 1949–50 *be taken into consideration.*'

" Hon. Members may be a little bit surprised to see that we are considering the accounts of the year 1949–50 only just now after nearly four years. But we could not avoid it, because copies of the Appropriation Accounts for 1949–50 and the audit report were received from the Accountant-General, Madras, only in April 1952. They were laid on the table of the previous Legislature in May 1952. The Public Accounts Committee which was constituted for the purpose of scrutiny of this report met in

4th January 1954] [Sri C. Subramaniam]

October 1952 and again in March 1953 when it finished consideration of the Appropriation Accounts. After that we were in the throes of Andhra partition. Therefore, even though the subject was on the agenda for very many days, we were not inclined to discuss it. Therefore I have to bring it before the House only now. The Andhra Legislature also will have to consider this report because it relates to the accounts of the Andhra area also. I am sure they will be taking action there. Hon. Members might remember that Mr. T. Viswanatham, who was the Chairman of the Public Accounts Committee, ceased to be a Member of this House and, therefore, ceased to be the Chairman of the Public Accounts Committee. This also caused some delay in the Public Accounts Committee meeting and submission of this report. Afterwards the Committee met under the chairmanship of Mr. R. V. Swaminathan, and finalised the consideration of the report. Let me take this opportunity of placing on record my sincere thanks to the Chairman who conducted the meeting, and also the members of the committee who carefully scrutinized all the items mentioned by the Accountant-General. The Report of the Public Accounts Committee is now before the House, and I am sure some of the hon. Members at least would have taken care to go through the report. Of course it is very old. But still certain things have been pointed out by the Public Accounts Committee for the future guidance of the Government. I give the assurance to this House that I will take note of all the points mentioned by the Public Accounts Committee and see that at least those mistakes do not recur. It is not as if no mistakes would be committed at all, because mistakes might creep in in spite of ourselves. But we shall try to avoid those mistakes which have been pointed out. We shall see that those mistakes do not recur. With his assurance, I hope the House would pass this motion. Since we are going to take up the Malabar Tenancy Bill only to-morrow, as soon as discussion on this motion is over, we will disperse immediately. (Laughter.) I hope this will be an inducement to hon. Members to be short and sweet."

MR. SPEAKER :—" Motion moved—

' That the Report of the Public Accounts Committee on the Accounts of the State of Madras for the year 1949–50 be taken into consideration.' "

SRI K. R. VISWANATHAN :—" Sir, I move the amendment standing in my name, namely,—

' Add *at the end of the following* :—
" *with special reference to the remarks under ' Unprofitable Outlay, on the purchase of diesel buses and the appointment of an Estimates Committee (paragraphs 8 and 26 of the Report).*" ' "

SRI S. RAMALINGAM :—" I second the amendment, Sir."

[4th January 1954

MR. SPEAKER :—" Motion moved—

' *Add* at the end the following :—

" with special reference to the remarks under ' Unprofitable Outlay, on the purchase of diesel buses and the appointment of an Estimates Committee (paragraphs 8 and 26 of the Report).'' ' ''

The motion and the amendment are before the House for discussion.

* SRI K. R. VISWANATHAN :—" கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கூறியபடி அரசாங்க கணக்குகளை பார்வையிட்ட ஆராய்ச்சிக் குழு அறிக்கையானது நம் சபையின் முன்பு இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த குழுவின் வேலை என்ன என்பதைப் பற்றி நாம் அறிவோம். எந்தெந்த காரணங்களுக்காக வரவு செலவு திட்டத்தில் தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தந்த காரியங்களுக்கு அவைகள் செலவழிக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது வீணாக செலவழிக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்து அறிக்கை அனுப்பிவிக்க வேண்டும் என்று ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. அவர்களுடைய அறிக்கையும் நமது கையில் இருக்கிறது. அந்த அறிக்கையில் கண்ட ஒரு சில விஷயங்கள் நம் எல்லோருக்கும் தெரிந்தவை. கனம் மந்திரி கூறியவாறு குற்றம் குறைகள் அங்கங்கே இருக்கின்றன. அவைகளை ஆராய்ச்சிக் குழு ஆராய்ந்து முடிவுகூறி இருக்கிறார்கள். அந்த மாதிரியான குற்றம் குறைகள் இனிமேல் நிகழாது இருக்கும்படி காரியங்களைச் செய்வோம் என்றும் குறிப்பிட்டார்கள். அந்த குற்றங்களுக்கு இப்பொழுதுள்ள சர்க்கார் காரணம் இல்லை என்றாலும் கூட பெரும் குற்றங்கள் இனிமேல் நிகழாது இருப்பதற்கு நாம் அவைகளை பரிசிலனை செய்வதன் மூலம் நம்முடைய கடமையைச் செய்ய இந்த தலைப்பை மாத்திரம் எடுத்துக்கொண்டு நான் பேச விரும்புகிறேன்,

" இந்த அறிக்கை **1949-50**-ம் வருஷ வரவு செலவு கணக்குகளைப் பற்றியதாகும். எந்த வருஷத்திய கணக்காக இருந்தாலும் அப்பொழுது இருந்த மந்திரி சபையோ அல்லது உத்யோகஸ்தர்களோ தான் அதற்குக் காரணமாக இருந்தார்கள் என்பதை மறக்க முடியாது. மந்திரிகளும் காரணமாக இருந்திருக்கலாம் அல்லது அப்பொழுதுள்ள உத்தியோகஸ்தர்
3-50 p.m. களும் காரணமாக இருந்து இருக்கலாம். மந்திரிகள் இன்றைக்கு இருப்பார்கள் நாளைக்கு இருக்கமாட்டார்கள். ஆனால் நிரந்தரமாக இருக்கக் கூடிய உத்தியோகஸ்தர்கள் தான் இவைகளுக்கு பொறுப்பாக இருக்கக்கூடாது என்பது தான் என்னுடைய வேண்டுகோள். அப்படி இனிமேல் இருக்க விடக்கூடாது என்பதும் தான் என்னுடைய வேண்டுகோள். இது மந்திரிகளுடைய பொறுப்பாக இருக்கவேண்டும். எந்த அரசாங்கமாக இருந்தாலும் உத்தியோகஸ்தர்கள் சரியான முறையில் ஒதுக்கப்பட்ட பணத்தை அந்தந்த வழிகளில் செலவழிக்க பொறுப்பாளிகளாக இருக்கவேண்டும். பொறுப்புத் தவறி நடக்கவிடக்கூடாது. இந்த பொறுப்பையும் கடமையையும் அவர்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான் இதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

" முதலாவதாக எடுத்துக் கொண்ட தலைப்பின் கீழ் இந்த அறிக்கையில் கண்டபடி நம்முடைய மாகாண சர்க்கார் **1949-50**-ல் '**25** டீசல் பஸ்களை' வாங்கி இருக்கிறார்கள். அதையும் இடாலியிலிருந்து வாங்கி இருக்கிறார்கள். அந்தக் கார் ஒவ்வொன்றும் ரூ. **50** ஆயிரத்திற்கு மேல் வாங்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி வாங்கி அங்கிருந்து இங்கு கொண்டுவரப்பட்டன. அந்தக் கார்களில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளை திருத்தி அமைப்பதற்கும் அதை ஓட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கும்படிக்கும் அங்கிருந்து திறமைமிக்க பழுது பார்க்கும் இஞ்சினியர்களையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. **2,000** செலவு செய்திருக்கிறார்கள். அந்த முறையில் லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

4th January 1954] [Sri K. R. Viswanathan]

அந்த 25 கார்களும் இந்த மாகாணத்திற்கு கொண்டுவந்த பிறகு என்ன நேர்ந்தது என்றால் அங்கிருந்து வந்திருந்த இஞ்ஜினியர்களுக்கும் கார்களுக்கும் செலவு செய்த பிறகு அந்த கார்கள் ரோடில் போவதற்கு தகுதியாக இல்லை. இந்த நிலையில் அவைகள் இருந்தன என்பதைப் பார்க்க வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. ரோடுகளில் போவதற்கு தகுதி இல்லாத கார்களை ஏன் வாங்கவேண்டும் ? இதுபற்றி அக்கௌண்டண்ட் ஜெனரல் கேட்ட கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட இலாகாவினர் கூறுகிறார்கள் ' சில கார்கள் ரோடுகளில் போகாமல் இருப்பது சகஜம் தான். அதுபோல் புதிய டீசல் கார்கள் நகராமல் இருப்பது ஒன்றும் புதிதல்ல' என்று கூறுகிறார். (அவருடைய சமாதானம் என்னவென்றால். **'It is a normal feature that buses are off the road for some reason or other for a time, that there was nothing exceptional about the diesel buses remaining idle for a period before they were put onthe road.** சாதாரணமாக கார்கள் பழுது ஆகி நிற்பது சகஜம்தான். டீசல் பஸ் 25 கார்கள் நிற்பது புதிது ஒன்றும் இல்லை. அவைகள் பழுதுபடாமல் நிற்பதும் மிகவும் ஆச்சர்யம் இல்லை என்று அவர் சமாதானம் கூறுகிறார். இதைத்தான் நானும் குறிப்பிட வேண்டி இருக்கிறது. லட்சக் கணக்கான ரூபாய் பணத்தைப் போட்டு வாங்கி நிபுணர்களைக் கொண்டு வந்து அதன் பிறகு கார்கள் ஓடவில்லை என்றால் பொறுப்பற்ற முறையில் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது டீசல் யந்திரங்களை எடுத்துவிட்டு பெட்ரோல் யந்திரங்களை வைத்து ஓட்டவேண்டிய அவ்வளவு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காகவா லட்சக் கணக்கான பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவில் ஒன்றை முக்கியமாக கவனிக்கவேண்டும். இந்தியாவிலுள்ள ஒரு தரகு கம்பெனி மூலமாக இட்டாலியிலிருந்து இந்த பஸ்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அந்த தரகு கம்பெனி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் மந்திரிகளுக்கும் வேண்டியவர்களாக இருந்து இருக்கிறார்கள். அதன் மூலம் தமக்கு வேண்டியவர்களுக்கு சௌகர்யம் செய்யவேண்டும் என்ற இந்த ஒரே நோக்கத்துடன் இந்த கார் வியாபாரம் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவந்தது. ஆகவே அந்த தரகு கம்பெனியாருக்கு சௌகர்யம் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இந்த காரியத்தை ஏன் செய்ய வேண்டும் என்று கேட்கிறேன். சர்க்கார் பணம் அதனால் விரயம் ஆக்கப்பட்டது என்பது தெரிகிறது. இது மறுபடியும் நிகழாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அது மட்டும் அல்ல. மூன்று நான்கு வருஷத்திற்கு முன்பு உள்ள கணக்குகளைப் பார்த்தால் பழம் கணக்காகி விடுகிறது அதைப்பற்றி பேசுவதில் பயன் ஒன்றும் இல்லை என்று பேச படுகிறது. அந்தந்த வருஷக் கணக்குகளை அந்தந்த வருஷத்தில் ஆராய்வதற்கு ஒரு ' எஸ்டிமேட் கமிட்டி ' அமைக்க வேண்டும் என்று இந்த அறிக்கையில் கடைசி பாராவில் சொல்லப்படுகிறது. அதன்படி ' எஸ்டிமேட் கமிட்டி ' அமைத்து அந்தந்த வருஷ கணக்குகளை ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அதற்கு அடுத்தபடியாக இந்தக் கணக்கு ஆராய்ச்சிக் குழுவில் இருக்கும் உறுப்பினர்கள் ஓரளவிற்கு இந்தக் கணக்குகளை ஆராய்ச்சி செய்யக்கூடிய அளவிற்கு திறமையுள்ளவர்களாக இருக்கிறார்களா என்றால் பலபேர்கள் கணக்குகளை அறிந்து கொள்வதற்கும் அரசாங்கக் கணக்குகளில் வரும் சொற்களின் பொருள்களை அறிந்துகொள்ள முடியவில்லை என்று தான் . . ."

Mr. SPEAKER :—"அவர்கள் இந்த அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான். அவர்களுக்கு தெரியாது என்று சொல்வது தவறு. அவர்கள் திறமைசாலிகள் அல்ல என்று சொன்னால் அது இந்த சபையை அவமானப்படுத்துவதாகும். அப்படிச் சொல்லக்கூடாது. அப்படிச் சொல்வது தவறு."

Sri K. R. VISWANATHAN :—"அவர்கள் புரிந்துகொள்ள முடியாத பல சொற்கள் இருக்கின்றன."

[4th January 1954

Mr. SPEAKER :—" அப்பொழுது என் அவர்களுக்கு வோட் போட்டீர்கள். அப்பொழுதே தான் நீங்கள் இதை ஆட்சேபித்திருக்கவேண்டும்."

Sri K. R. VISWANATHAN :—" இதில் என் போன்றோர் புரிந்து கொள்ளவேண்டிய சொற்கள் உதாரணமாக "**unremedied excess suspense heads**" போன்றவை இருக்கின்றன. இந்தத் துறையில் பழகினவர்கள் இல்லை என்று சொல்ல வருகிறேன். ஆகவே ஒன்று இரண்டு வருஷங்கள் இந்த ஆராய்ச்சிக் குழுவில் பழகினவர்கள் இதில் இருந்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

Sri K. VINAYAKAM :—" Sir, as the Hon. the Minister for Finance admitted in the beginning that we were considering only the Report of the Public Accounts Committee on the accounts for the year 1949–50 in the year 1954, after a lapse of four years, I am likely to be convinced by the arguments advanced by him in the later stages that the Report was submitted to the Government by the Accountant-General only in 1952. I do not see any inordinate delay on the part of the Government after it was received by them. There was scope for delay on the part of the Government because of the partition of the State. But could not something have been done to hasten the submission of the Report to the Government by the Accountant-General? What exactly was the cause for this kind of delay? The accounts must have been ready after the lapse of the year 1950. Then, is it necessary that two years should be taken to go through the accounts and certify that they may be brought before the Assembly? If the Hon. Minister could throw more light on this aspect of the question, we shall be grateful to him."

4 p.m. **Sri S. RAMALINGAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, **1949–50** வது ஆண்டிலேதான் நம்முடைய சர்க்கார் " அனுமார் " என்ற ஒரு எரோப்ளேனை வாங்கினார்கள். மந்திரிகளுடைய பிரயாணத்திற்காக அந்த எரோப்ளேனை வாங்கினார்கள். அந்த எரோப்ளேனை வாங்கினார்களே, அதில் பறந்தார்களா என்றால், அதிகம் பிரயாணம் செய்ததாகத் தெரியவில்லை. ஒரு தடவை இரண்டு தடவை பறந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் அதில் பறந்ததைவிட, அதற்காக ரிப்பேர் செய்த தொகை ரொம்ப அதிகம். அது பறந்ததைவிட இறங்கினதுதான் ஜாஸ்தி. பிறகு, அதை விற்பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால், அதை வாங்குவதற்குக் கூட ஆள் இல்லை. கடைசியில் அதை இனாமாக மத்திய சர்க்காருக்குக் கொடுத்திருப்பதாக ரிபோர்ட்டிலிருந்து தெரியவருகிறது. ஒரு பழமொழி ஒன்று சொல்வதுண்டு. ஒரு ஏழைக்கு யானையொன்றை தானமாக கொடுத்தது போதாதென்று அந்த யானையைப் பராமரிப்பதற்கான செலவுத் தொகையையும் கொடுக்க வேண்டியிருந்ததாம். அதுபோல, அந்த எரோப்ளேனை மத்திய சர்க்காருக்கு இனாமாகக் கொடுத்தது போக, அதற்கான நிர்வாகச் செலவையும் நமது சர்க்கார் கொடுத்திருக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை.

" ஸ்டேட் ட்ரேடிங் ஸ்கீம்கள் ' என்ற முறையில் சர்க்கார் வியாபாரங்கள் நடத்தும்போது பலவிதமான நஷ்டங்கள் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக நெல் அறைப்பதற்காக சில இயந்திரங்கள் வாங்கி, அதைப் பல இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி, அதன் மூலமாக ' எக்ஸ்-ஸெர்வீஸ்மென் ' களுக்கு வேலை கொடுப்பதற்கென்று பல லட்சக்கணக்கான ரூபாய்களை வீண் விரயம் செய்திருக்கிறது. அந்த இனங்களில் லாபம் இல்லாதது தவிர, வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு சரியான ஊதியம் கூட கிடைப்பது.

4th January 1954] [Sri S. Ramalingam]

" கையினால் பேப்பர் செய்கிறோம் என்று 3 அல்லது 4 யூனிட்டுகளை ஆரம்பித்து, அதில் எந்த விதமான லாபமும் சர்க்காருக்குக் கிடையாது. அதிலும் சர்க்காருக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும்.

" விவசாய இலாகாவில் விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளெல்லாம் வாங்கி வைத்திருக்கிறார்கள். விவசாயிகளின் நன்மைக்கு என்றும், விவசாயிகளுக்கு வினியோகம் செய்கின்றோம் என்று சொல்லி வேண்டாத கருவிகளையெல்லாம் பணம் கொடுத்து வாங்கி வைத்தார்கள். அவைகளெல்லாம் வினியோகிக்கப்படாமல் ஒன்றுக்கும் உதவாமல் சர்க்கார் விவசாய இலாகாவைச் சேர்ந்த கிடங்கில் கிடக்கின்றன.

" ஆகவே, இம்மாதிரியெல்லாம் பொதுமக்களுடைய பணத்தை 1949–50 வது ஆண்டில் போதுமான கவனம் செலுத்தாமல், பஞ்ச காலத்தில் ஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு செலுத்திய வரிப்பணத்தை, இவர்கள் தங்களுக்கு தோன்றியதனமாக செலவழித்திருக்கிறார்கள். அந்தமாதிரி இருக்கக்கூடாது. இனிமேலாவது கனம் மந்திரி அவர்கள் ஒத்துக் கொண்டது போல மிகவும் கட்டுப்பாடுடனும், கண்காணிப்புடனும் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I am grateful for the various suggestions put forward by the hon. Members. But I am unable to accept the statement made by the hon. Member Sri Viswanathan that the purchase of the diesel buses was put through to favour certain persons. There are no materials to warrant such a conclusion. Without such materials and especially when the Minister concerned is not alive now, it is uncharitable to make such a remark. Even though the Government might have incurred a loss on that account, without sufficient materials, we should not level a charge that some favouritism was practised by any particular Minister. Apart from that, we have to take into consideration the conditions prevailing in 1948 when the Government wanted to nationalise the City bus transport as such. The diesel buses were supposed to be very economical and they were not available from British sources which were supposed to be generally reliable. Therefore, the Government had to purchase all these buses from Italy. Unfortunately, we are wiser after the event. After some time, it was found that the diesel engines were not rendering useful service. Therefore, the Government had to change from diesel engines to petrol-driven engines. As a matter of fact, we are now changing many of the buses from petrol to diesel because the latter is more economical. But, unfortunately, in the cases referred to by the hon. Member, we had to change from diesel to petrol and consequently we had to incur an extra expenditure. To that extent, I agree it has been a loss to the public exchequer."

SRI K. VINAYAKAM :—" It is stated that one such bus purchased during that period is still missing . Is it a fact? "

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" The hon. Member seems to have very useful information. If he has such information, he may pass it on to me. I shall verify and if it is true and if anybody is responsible for that, action will also be taken. It is true that we had to incur a certain extra expenditure in this

[Sri C. Subramaniam] [4th January 1954

case. That is why we have now constituted an expert committee for the purpose of making these purchases. That expert committee goes into the entire matter and then makes recommendations to the Government. It is only after taking into account the expert committee's recommendations that we now make our purchases. Therefore I may assure the hon. Members that we will take as much care as possible so that in the purchase of these buses and other articles there may not be unnecessary loss to the public exchequer. He also referred to some of the new technical words with which the hon. Members were not conversant. I may tell the hon. Members that I too was finding some difficulty in regard to this matter. If only we make an attempt, we can understand them. Those are merely technical words. I only request the hon. Members to become conversant with those words. It is not as if it is very difficult to understand them. It is an easy job if only they refer to a dictionary. Or, if they pass on to me a list of such words with which they are not conversant, I shall have a note prepared in the Finance Department giving their meaning and explaining those words and terms, and circulate it to all the hon. Members.

"With reference to the caution given by the hon. Member Sri Ramalingam, I have taken note of it. I may give the assurance to the House that we shall try to be as careful as possible with regard to public money which is entrusted to us. We will try our best to see that no unnecessary expenditure is incurred and no unnecessary loss is incurred by the Government. With that assurance, I request the hon. Member Sri Viswanathan to withdraw his amendment. The point is no useful purpose will be served by discussing that particular item. There are three or four items as mentioned by hon. Member Sri Ramalingam. It is not as if there is only one particular item to take note of. We have to take note of all the items brought to our notice. Under these circumstances, I request him not to press his amendment."

Sri K. R. VISWANATHAN :—"What about the appointment of an Estimates Committee, Sir?"

* The Hon. Sri C. SUBRAMANIAM :—"With regard to the appointment of an Estimates Committee, I have just now got information about the procedure followed in Parliament. I will go through it. If I find that it will facilitate matters here, I will certainly take steps to constitute an Estimates Committee. However, I find there is a little difference between what is happening in the Central Government and in the State Government have. This point will have to be examined. After examination of this point is completed, I will certainly inform the House what action I am going to take in this regard."

Mr. SPEAKER :—"Apart from that, if an Estimates Committee is to be appointed, our rules have got to be changed. We must make some amendment to our present rules. An amendment in this regard has already been proposed for consideration by

4th January 1954] [Mr. Speaker]

the Rules Committee. It would be circulated to the hon. Members who have been recently appointed as members of that Committee. I hope my suggestion to have an Estimates Committee will be before the Rules Committee very soon for discussion."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" I am grateful to you, Mr. Speaker. The Committee constituted to go into the rules may go into this question also. I will place before the Committee whatever is necessary. If they come to the conclusion that an Estimates Committee is necessary, certainly I will be the last person to object to its constitution."

SRI K. VINAYAKAM :—" The Hon. Minister was not kind enough to say why the report was not brought to the notice of the Government in time by the Accountant-General."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, the Accountant-General has to go into the accounts after they are completed. The financial year ends with March 31st. But actually, the accounts are kept open till about October for the purpose of adjustment. We are able to submit the accounts to him by the end of that year and then he has to call for explanations from the various departments and there has been some delay, in respect of these explanations for which the various departments were taken to task during the proceedings of the Public Accounts Committee. We have issued instructions that as soon as explanations are called for by the Accountant-General, they should be immediately submitted and that there should be no avoidable delay. So we are already looking into the matter. With the best of efforts, it will not be possible for the Accountant-General to report before 15 or 18 months. That is the whole trouble. I have talked over the matter with the Accountant-General and have requested him to expedite the report as far as possible so that we may have some interest in the discussion. If the report relates to the past 3 or 4 years, we lose interest. I hope we will discuss the report relating to 1952–53 in the next year."

SRI K. R. VISWANATHAN :—" I withdraw my amendment, Sir."

The amendment was, by leave of the House, withdrawn.

MR. SPEAKER :—" The question is—

' That the Report of the Public Accounts Committee on the Accounts of the State of Madras for the year 1949–50 be taken into consideration.' "

The motion was put and carried.

MR. SPEAKER :—" The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow."

The House then adjourned.